


முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாள் நிறைவு நாளை முன்னிட்டு திருமயம் சட்டமன்ற தொகுதியில் 2025 ஜூன் 3 தேதி முதல் 2025 செப்டம்பர் 11வரையிலானா 101 நாட்களுக்கு 101 ஊராட்சிகளில் நாள் ஒன்றுக்கு 500 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு விடியல் விருந்து எனும் திட்டத்தின் மூலம் திருமயம் சட்டமன்ற தொகுதியில் தேக்காட்டூர் ஊராட்சியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில் மற்றும் தி.மு.க. மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் அண்ணாமலை ரகுபதி ஏற்பாட்டில் ‘விடியல் விருந்து’ திட்டத்தில் பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது ஜெ.ஜெ கல்லூரி செயலாளர் சுப்பிரமணியம், அரிமளம் வடக்கு ஒன்றியச் செயலாளர் பொன் இராமலிங்கம் மற்றும் அரிமளம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வி.ஆர் இளையராஜா மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

### வடலூர் - பார்வதிபுரத்தில்

# ஏரியில் மூழ்கி உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

*கடலூர், ஜூன் 17-*

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடலூர், பார்வதிபுரம் கிராமத்திலுள்ள ஏரியில் மூழ்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடலூர், பார்வதிபுரம் கிராமம், சவேரியார் நகரைச் சேர்ந்த வின்சென்ட் அமல் ராஜ் அந்தோணி என்பவரின் மகன் அப்டியல் டெவின் ரோஜர் (வயது 17) என்பவர் நேற்று முன்தினம் (14.6.2025) மாலை சுமார் 5.00 மணியளவில் பார்வதிபுரம் கிராமத்திலுள்ள வெங்கலத்து ஏரியில் நண்பர்களுடன் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தர விட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### 296 பயனாளிகளுக்கு ரூ.6.48 கோடியில்

# கரூர் மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள்!

## முன்னாள் அமைச்சர் வீ.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

*கரூர், ஜூன் 17-*

கரூர் மாவட்ட கழக செயலாளர் செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., 296 பயனாளிகளுக்கு 6.48 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு, தமிழ்நாடு அரசின் சாதனை மலரை வெளியிட்டு பேசினார்.

கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற விழாவிற்கு மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் தலைமை வகித்தார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் 145 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்க்கான ஆணைகளையும்,

கால்நடை பராமரிப்பு துறையின் சார்பாக விவசாயிகளுடைய ஆடுகளை நாய்கள் கடித்து இறந்ததன் விளைவாக தமிழ்நாடு அரசின் சார்பாக 13 விவசாயிகளுக்கு ரூ.3.12 இலட்சம் மதிப்பீட்டில் இழப்பீட்டுத் தொகைகளும் மற்றும் மகளிர் திட்டம் சார்பாக வட்டார வணிக வள மையம் மற்றும் சமுதாய முதலீட்டு நிதியாக 38 பயனாளிகளுக்கு 5.16.80 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவிகளையும் என மொத்தம் 296 பயனாளிகளுக்கு ரூ. 6.48 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வி.செந்தில்பாலாஜி வழங்கினார். முன்னதாக செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பாக தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் “நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு” எனும் தலைப்பில் சாதனை மலரை வி.செந்தில் பாலாஜி வெளியிட கலெக்டர் மீ. தங்கவேல், பெற்றுக் கொண்டார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர் மாணிக்கம் (குளித்தலை), ஆர்.இளங்கோ(அரவக்குறிச்சி), க. சிவகாம சுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாநகராட்சி மேயர் வெ. கவிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

எம்.எல்.ஏ. வி.செந்தில் பாலாஜி பேசியதாவது

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் திட்டங்கள் மற்றும் பல்வேறு அறிவிக்காத திட்டங்களை யும் முழுமையாக செயல்படுத்தி தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றி உள்ளார்கள், அந்த வகையில், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் குடிசைகளே இல்லாத நிலையை உருவாக்க வேண்டுமென கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தை தொடங்கி வைத்து, கரூர் மாவட்டத்தில் 2 ஆண்டுகளில் 1445 வீடுகள் ரூ.45.00 கோடி மதிப்பீட்டில் ஒதுக்கீடு பெறப்பட்டு,742 வீடுகள் கட்டப்பட்டு வருகிறது மற்றும் 703 வீடுகள் கட்டுவதற்க்கான ஆணைகள் வழங்கப்படவுள்ளது. தமிழ்நாடு அரசு உங்களில் ஒருவராக இருந்து பொதுமக்கள் வீடு கட்டி முடிக்கும் வரை உங்களுக்கு துணை நிற்க்கும்.

மகளிர் பயன்பெறும் வகையில் மகளிர் உரிமைத் திட்டத்தினை தொடங்கி வைத்து, மாதந்தோறும் ரூ.1,000 வழங்கி வருகிறார்கள். கரூர் மாவட்டத்தில் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம் 1,69,729 மகளிர் பயன்பெற்று வருகின்றனர். அதேபோல் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 729 பள்ளிகளில் பயிலும் 30,869 மாணவ மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மகளிர் விடியல் பயணத்திட்டம் இந்தியாவுக்கே வழிகாட்டும் உன்னத திட்டமாக திகழ்கிறது. குறிப்பாக புதுமைப்பெண், தமிழ் புதல்வன், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, கல்லூரி கனவு, மக்களுடன் முதல்வர், நான் முதல்வன், மக்களை தேடி மருத்துவம், இல்லாம் தேடி கல்வி, உழவரைத் தேடி உழவர் நலத்துறை, போன்ற சிறப்பு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் 200,000 விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. நமது மாவட்டத்திற்கு 1 அரசு வேளாண்மை கல்லூரி, 1 அரசு கலைக் கல்லூரி, தரகம்பட்டி கல்லூரிக்கு புதிய கட்டிடம். குளித்தலை அரசு மருத்துவமனைக்கு ரூ.40கோடி மதிப்பீட்டில் கட்டிடம், கரூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு ரூ.23.கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம், காவிரி ஆற்றின் குறுக்கே நெரூர் உன்னியூர் ரூ. 100 கோடி மதிப்பீட்டில் புதிய உயர்மட்ட பாலம், மாநகராட்சி பகுதிகளில் ரூ 300 கோடி மதிப்பீட்டில் புதிய சாலைப் பணிகள் மற்றும் சாக்கடை பணிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் போன்ற பல்வேறு சிறப்புத் திட்டங்களை அறிவித்து செயல் படுத்தியுள்ளார்கள். வேளாண் துறைக்கு தனி நிதி நிலை போன்ற எண்ணற்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி தமிழகத்தை இந்தியாவில் முதன்மை மாநில மாக மாற்றி வருகிறார்கள்.

முதலமைச்சர் மு.ஸ்டாலின் அவர்களின் கனவுத் திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 50 பேர் போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இந்தத் திட்டத்தின்கீழ் மூலம் 4 ஆண்டுகளில் 41.00 இலட்சம் நபர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். நமது மாவட்டம் சிறிய மாவட்டமாக இருந்தாலும் வளர்ச்சி பெரிய மாவட்டஅளவில் உள்ளது. கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் 250 ஏக்கர் பரப்பளவில் சிட்கோ அமைக்கப்படவுள்ளது. அரவக்குறிச்சியில் புதிய முருங்கை பார்க் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் கரூர் மாவட்ட மக்கள் என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் நான் உங்கள் வீட்டில் ஒருவன், உங்களுக்காகவே உழைக்கக்கூடியவன். இவ்வாறு அவர் பேசினார்.

மாற்றுத்திறனாளிகள் ரூ.1.18 கோடி மதிப்பீட்டில் 100 பயனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்திய பெட்ரோல் ஸ்கூட்டர்களையும் வழங்கினார். துணை மேயர் ப. சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்செல்வன், வேளாண்மை இணை இயக்குநர் ப.சிவானந்தம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) யுரேகா, சமுக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் பிரகாசம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சரவணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் க. செந்தில்குமார், ஆதிதிராவிடர் நல அலுவலர் சக்திபால கங்காதரன், பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் இளங்கோ, கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமதுபைசல், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விஜயலெட்சுமி, வினோத்குமார், கிருஷ்ண மூர்த்தி, மாற்றுதிறனாளிகள் நல அலுவலர் மோகன்ரா அலுவலர் திரு சக்திபால கங்காதரன், பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.இளங்கோ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் தேவனூர் கிராமத்தில் முன்னாள் எம்.பி. எஸ்.சிவசுப்பிரமணியன் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், ஆலத்தூர் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர், ஒன்றிய கழக செயலாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, சிவராஜேஸ்வரி சிவசுப்ரமணியன், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டு மாலை அணிவித்து, மலர்தூவி புகழஞ்சலி செலுத்தினார்கள்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் கொங்கு திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில், கரூர் மாவட்ட கழகத்தின் சார்பில், 608 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 60 லட்சம் மதிப்பிலான கல்வி நிதி உதவிகள் மற்றும் மருத்துவ நிதி உதவிகளை கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார். எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க. சிவகாமசுந்தரி மற்றும் கழக நிர்வாகிகள் அருகில் உள்ளனர்.

### சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமில்

# சேலம் மாவட்டத்தில் 6.81 இலட்சம் கால்நடைகள் பயன்பெற்றன!

## முகாமினை தொடங்கி வைத்து அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

*சேலம், ஜூன் 17-*

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமினை சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி, சாய்பாபா காலனி பகுதியில் 15.06.2025 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் இன்றையதினம் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் சுமார் 6.81 இலட்சம் கால்நடைகள் உள்ளன. கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாக 149 கால்நடை மருந்தகங்களும் 7 நடமாடும் மருந்தகங்களும், 7 கால்நடை மருத்துவமனைகளும் மற்றும் ஒரு கால்நடை பன்முக மருத்துவமனையும் கால்நடைகளுக்கு சிகிச்சை மற்றும் இதர கால்நடை பராமரிப்பு சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

கால்நடைகளின் நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு ஒன்றியத்திற்கு 20 முகாம்கள் வீதம் மொத்தம் 240 சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. கோமாரி நோய், பெரியம்மை நோய், கன்று வீச்சு நோய், அடைப்பான் நோய், ஆட்டுக்கொல்லி நோய் மற்றும் கோழி வெள்ளை கழிச்சல் நோய் போன்ற நோய்களுக்கான தடுப்பூசி மற்றும் சிகிச்சைப்பணிகள் இம்முகாமின்போது மேற்கொள்ளப்படுகின்றன.

இம்முகாமில், கால்நடைகளுக்கு சிகிச்சை, குடற்புழு நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், சினை ஆய்வு, சினை பருவ ஒருங்கிணைப்பு, மலடு நீக்கம், சிறிய அளவிலான அறுவை சிகிச்சைகள், சினையுறா மாடுகளுக்கு நவீன ஸ்கேன் கருவிகள் மூலம் ஆய்வு, புற ஒட்டுண்ணிகள் நீக்கம் ஆகிய சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகிறது. கால்நடை நோய் புலனாய்வு பிரிவின் மூலம் கால்நடைகளுக்கான தோல் நோய்கள், சாணம், ரத்தம், சளி, பால் ஆகிய மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதற்கான உரிய மருத்துவச் சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. குறிப்பாக, பசு மற்றும் எருமைகளுக்கு செயற்கை முறை கருவுட்டலும், சினையுறாத மாடுகளுக்கு சிறப்பு ஸ்கேன் பரிசோதனையும் செய்து உரிய சிகிச்சை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



குறிப்பாக கால்நடை வளர்ப்போரின் இல்லங்களுக்கே சென்று கால்நடைகளுக்கு அவசர சிகிச்சை வழங்கிடும் வகையில் சேலம் மாவட்டத்தில் 15 நடமாடும் வாகனங்கள் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ளன. இதன் தொடர்ச்சியாக இன்றையதினம் கெங்கவல்லி வட்டாரத்திற்கான மேலும் ஒரு நடமாடும் வாகனம் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கால்நடை வளர்ப்போர் பொருளாதார ரீதியாக பயன்பெறும் வகையில் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் பாலின பாகுபாடு செய்யப்பட்ட உறைவிந்து குச்சிகள் மூலம் கருவூட்டல் செய்து கிடேரி கன்றுகள் மட்டும் ஈனும் வகையிலான திட்டம் இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டு அதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கால்நடை விவசாயிகளுக்கு சிறப்பாக கிடாரி கன்றுகள் வளர்த்தமைக்கான பரிசுகளும், கால்நடை ஊட்டச்சத்து பொருட்களும் வழங்கப்பட்டது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர்இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கன்னங்குறிச்சி பேரூராட்சியில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் சேலம் ஏற்காடு ரோடு, பச்சா ரோடு குறுக்குத்தெரு, எல்.பி.செட்டி தெரு, சின்ன மாரியம்மன் கோயில் தெரு, குறிச்சா நாராயணன் தெரு, ஆறுமுக ஐயர் தெரு உள்ளிட்ட இடங்களில் தார் சாலை மேம்படுத்துதல் பணிக்கு அடிக்கல் நாட்டி வைத்து பணிகளை தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.பிரகாசம், துணை இயக்குநர் மரு.தமிழரசு, உதவி இயக்குநர் மரு.ரகுபதி, கன்னங்குறிச்சி பேரூராட்சி தலைவர் குபேந்திரன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள், கால்நடை வளர்ப்போர் கலந்துகொண்டனர்.



கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், நாயக்கம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட பாலமலை, மலைப்பகுதியில் வாழும் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் விதமாக பாலமலை அரசு நடுநிலைப் பள்ளியில் 76 பழங்குடியின மக்களுக்கு ரூபாய் 5,30,000 மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான பணி ஆணையினை கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கினர். இதில் மாவட்ட துணை செயலாளர் அசோக் பாபு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.பி.சுப்ரமணியன், பெரியநாயக்கன்பாளையம் கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.கார்த்திக், எஸ்.எஸ்.குளம் ஒன்றிய செயலாளர் எஸ்.பி.சுரேஷ், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் சாந்திப்பிரியா சந்துரு ஜகவி, முன்னாள் துணைத் தலைவர் சின்ராஜ், ரவி (எ) பாலச்சந்தர், ராதாகிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றியச் செயலாளர் க.செந்தில்குமார் தலைமையில் பெரியபாப்பானூத்து, பூலாங்கிணறு, இராகல்பாவி ஊராட்சிகளில் கழக கொடியேற்றி, மரக்கன்றுகளை நட்டு வைத்தனர். இதில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அனிதா செல்வராஜ், பொதுக்குழு முன்னாள் உறுப்பினர், திருமூர்த்திமலை அறங்காவலர் குழு தலைவர் ஈசிஆர்.ரவி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை தலைவர் மணிகண்டன், மாவட்ட அயலக அணி துணைத்தலைவர் கார்த்திக்குமார், ஒன்றிய நிர்வாகிகள் ஞானசேகரன், ஈஸ்வரமூர்த்தி , சந்திரசேகர், ரவிக்குமார், போடிபட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் சௌந்தர்ராஜன் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.